**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 08 ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண். 22 /2019**

வாதி தரப்பு சாட்சியாக PW. 1 ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது சட்ட ஏற்பாடின் படி திரு. P. ஜேசுபாலன், எம்.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான் அவர்களால் ஆணையிடப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முத்துலெட்சுமி | Husband Name | : | காத்தலிங்கம் |
| Village | : | சித்தன் வாழூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 56 |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

கழுவைய்யன் இறந்து எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்று எனக்கு தெரியாது. எனது அப்பா முனுசாமி யார் முன்னிலையில் கழுவைய்யனிடம் இருந்து ரூபாய் 2000/- வாங்கினார் எந்த தேதியில் வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால்அதுபற்றி எனக்கு தெரியாது. கழுவைய்யனிடம் மேற்படி தொகை வாங்குவதற்கு முன்பு வழக்கு சொத்தை நாங்கள் தான் அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். வழக்குசொத்தை கழுவைய்யனிடமிருந்து பணம் பெறுவதற்கு முன்பு நாங்கள் தான் அனுபவித்துவந்தோம் என்பதற்கு எவ்வித ஆவணமும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கழுவைய்யனிடமிருந்து முனுசாமி ரூபாய் 2000 பணத்தை பெற்றுக்கொண்டு அனுபவத்தை ஒப்படைத்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்குசொத்துக்கள் அனைத்தும் ஒரே தாக்காக அமைந்துள்ள தொடர்ந்த இடம் என்றால் சரிதான். வழக்குசொத்தின் கீழ்புறம் அமைந்துள்ள இடம் யாருடையது என்றால் வடக்கு தெருவை சேர்ந்த சுந்தரராஜன் என்பவருடையது. வழக்குசொத்தின் மேற்கே அமைந்துள்ள இடம் யாருடையது என்றால் பாலு என்பவருடையது. வழக்குசொத்தின் தெற்கே அமைந்துள்ள இடம் யாருடையது என்றால் அமராவதி ஊரை சேர்ந்தவருடையது. வழக்குசொத்தின் வடக்கே அமைந்துள்ள இடம் யாருடையது என்றால் யாருடையது என்று தெரியாது. பிரதிவாதிகளிடம் நான் ரூபாய் 2000 பணத்தை எங்கு வைத்து கொடுக்க முயன்றேன் என்றால் சித்தன்வாழூர் மணி வீட்டில் வைத்து கொடுக்க முயன்றேன் அவர்கள் அதனை வாங்க மறுத்துவிட்டனர். அப்போது அங்கு பிரதிவாதிகள் இருவரும் இருந்தனரா என்றால் இருவரும் இருந்தனர். ஏற்கனவே அய்யாதுரை என்பவரிடம் சென்று பஞ்சாயத்து பேசியது மணி வீட்டில் பேசியதற்கு முன்பா அல்லது பின்பா என்றால் மணி என்பவரின் வீட்டிற்கு சென்று பேசிய பிறகுதான் அய்யாதுரையிடம் சென்று பேசினோம். எனக்கு வழக்குசொத்தின் நான்கு எல்லை விபரம் நான் வழக்கு சொத்திற்கு பல ஆண்டுகளாக செல்லாததால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனாரிடமிருந்து கழுவைய்யனிடம் வழக்கு சொத்தின் அசல் ஆவணம் எப்படி சென்றது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது அப்பாவுக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் எனது தந்தை படிப்பார் ஆனால் கையொப்பம் போடுவாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. எனது தந்தை கையொப்பம் செய்வார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. கடந்த 1986 ஆம் ஆண்டு எனது தகப்பனார் பிரதிவாதியின் தகப்பனாரிடம்

வழக்குசொத்தை ரூபாய்.6120 க்கு கிரயத்திற்கு பேசி அதில் ஒரு பகுதி பணமாக ரூ.5120 பெற்றுக்கொண்டு அசல் ஆவணத்தையும் தாவா சொத்தின் அனுபவத்தையும் கழுவைய்யனிடம் கொடுத்துவிட்டு கடந்த 05.03.1987 அன்று அதன் மீதித் தொகை ரூபாய். 1000 ஐயும் பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. சம்பவத் தேதி தெரியுமா என்றால் கொரோனாவுக்கு முன்பு நடந்தது. சம்பவத்தன்று எத்தனைபேர் வந்தார்கள் என்றால் வடக்கு தெருவில் மணி வீட்டில் நடந்தது மட்டும்தான் வேறு எந்த பிரச்சனையும் எங்களுக்குள் நடக்கவில்லை. எனது தகப்பனார் கிரயத்தொகை முழுவதையும் பிரதிவாதியின் தகப்பனாரிடமிருந்து பெற்றுகொண்டு தொடர்ந்து தாவா சொத்தை பதிவு செய்து கொடுக்க மறுத்து வந்தார் என்றால் சரியல்ல. இது தொடர்பாக எங்கள் ஊரின் பஞ்சாயத்தார்கள் கரிகாலன், சின்னபிள்ளை, ராஜதுரை எங்களிடம் மேற்படி தாவா சொத்தை பதிவு செய்து கொடுக்க சொல்லி கேட்டார்களா என்றால் கேட்கவில்லை. கடந்த 1987லிருந்து இன்று வரை தாவா சொத்து பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றாலும் எங்களது அனுபவத்தில் இல்லை என்றாலும் சரிதான். நாங்கள் பலமுறை கேட்டும் அவர்கள் எங்களிடம் கொடுக்கவில்லை.

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.10.08 17:20:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.